18.03.2025 வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 155/2021 ) திரு.முருகாண்டி.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) எனக்கு சொந்த ஊர் தலையாள்நடந்தான்குளம் தான் பிறந்தது முதல் அங்குதான் இருக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வாதி 3ம்பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான். ஊர்காவலன் தகப்பனார் பெயர் என்னவென்றால் பலவேசம். பலவேசத்திற்கு வாரீசு எத்தனைபேர்கள் என்றால் ஒரு பெண் இருந்தது இறந்துவிட்டது. மற்றும் 3 ஆண்கள் உண்டு. பலவேசத்தின் மகள் வாரிசுகள் அந்த ஊரில் இருந்து வருகிறார்களா என்றால் அவருக்கு திருமணம் ஆனது வாரீசுகள் இருப்பது பற்றி எனக்குத்தெரியாது. 3ம்பிரதிவாதியின் தந்தையான பலவேசத்திற்கு எவ்வளவு சொத்துக்கள் எங்கு எங்கு உள்ளது என்று தெரியுமா என்றால் நிறைய காடுகள் உண்டு அது எங்கு எங்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது. ஊர்காவலனுக்கும், அவரின் உடன் பிறந்தவர்களுக்கும் இடையே பாகப்பிரிவினை நடைபெற்றது தெரியுமா என்றால் தெரியாது. பாலமுருகனும், அவரது அப்பா ஊர்காவலனும் ஒரே தெருவில் வசித்து வருகிறார்களா என்றால் ஆமாம். அவர்கள் குடியிருந்து வரும் தெருவில் நான் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். அதனால் அவர்கள் குடும்பத்திற்குள் கடந்த 5 ஆண்டுகளாக என்ன என்ன நடைபெற்றது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான்.

2) வாதி இந்த வழக்கு தாக்கல் செய்த காலமான 2021 ல் வழக்குதாக்கல் செய்த போது வழக்கு பற்றியோ வழக்கறிஞரையோ சந்திக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன என்ன சொத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு சொத்துக்கள் உள்ளதா என்றால் எனது அப்பா காலத்தில் உள்ள சொத்தும் உள்ளது நான் தனியாகவும்சொத்துக்கள் வாங்கியுள்ளேன். எனதுசொத்துக்களுக்குரிய சர்வே எண்.பட்டா எண்சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும் பட்டாவை பார்த்தாலும் தெரியும். சர்வே எண்.32ல் 5 ½ ஏக்கர், சர்வே எண்.4,5 ல் 10 ஏக்கர் நிலம் உள்ளது. சர்வே எண்.38ல் 2 ஏக்கர் நிலம் உள்ளது. மற்றவைகள் இடமாகத்தான் உள்ளது அதன் சர்வே எண் மற்றும் அளவுகளும் தெரியாது என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு அருகில் எனது சொத்து உள்ளதா என்றால் சர்வே எண்.32 அருகில் உள்ள சொத்து தான்.சர்வே எண்.32க்கு கீழ்புறம் தாவாச்சொத்து உள்ளது அதன் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால்

தெரியாது. அந்த சொத்துக்ளை யார் விவசாயம் செய்து வருகிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் கட்டுக்குத்தகை, அடமானம் போட்டு விவசாயம் செய்து வருகிறார்கள் ஏகபட்டவர்கள் இருப்பதால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. வழக்கு 1,2 தபசில் சொத்து பற்றி தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1,2 தபசிலில் என்ன சொத்துகள் விவரிக்கப்பட்டுள்ளது என்று தெரியாது என்றால் சரிதான். போன முறை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்த போது நிருபண வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டேன் அதில் என்ன விவரம் சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பாலமுருகன் எனக்கு சொந்தமா என்றால் எனது மகளின் கணவர் ஆவார். ஆகையால் எனது மருகனுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
18.03.2025.